

# சுதேசமித்திரன்

நமக்கு தொழில் நாட்டுக்கு உழைத்தல்;
இமைபொழுதும்சோராதிருத்தல்.

சக்கரம் 2 ஆரம் 1

- உலகை மனிதன் ஆள்வதெப்படி?
- என்னவள்
- அஷ்டமாதேசம் [தொடர்]
- தொட்டாச்சிணுங்கி

# எண்ணற்ற உயிரினங்கள் இருந்தும், உலகை மனிதன் ஆள்வது எப்படி?

**கார். அகிலன்**

உலக அளவில் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாத சாதாரண விலங்கு மனிதன். இது எழுபதனாயிரம் ஆண்டுகளுக்கு முன். அன்று தேனீ, எறும்பு ஏன் ஈ அளவிற்குக்கூட தாக்கத்தை ஏற்படுத்த முடிந்திராத உயிரினம் மனித இனம்.

இன்று, இவ்வுலகம் மட்டுமின்றி விண்ணுலகையும் ஆளும் திறன் வந்தது எப்படி? ஆப்ரிக்க காடுகளில் தனக்கான இடத்தில் சாதுவாக இருந்த ஒரு குரங்கு இனம் இன்று உலகை ஆளும் ஆற்றல் பெற்றதின் ரகசியம் என்ன? தெளிவோம்.

மனிதன் தன்னை மற்ற விலங்குகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதை இன்று நேற்றல்ல பல ஆயிரம் ஆண்டுகளாகவே வழக்கமாக வைத்துள்ளான். நாய்களைவிட, பன்றிகளைவிட, மனிதக்குரங்குகளைவிட தமக்கு ஏதோ ஒரு சிறப்பு இருப்பதாக நம்புகிறான். ஆனால் நிலை வேறு. தனி ஒரு மனிதனை தனி ஒரு மனிதக்குரங்கோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இக்கட்டான சூழல் மனிதனுக்குத்தான். யாருமில்லாத தீவில் ஒரு மனிதனையும் மனிதக்குரங்கையும் விட்டால் உயிர் பிழைப்பது நிச்சயம் மனிதக்குரங்காகத்தான் இருக்கும்.

பின்பு மனிதனின் பலம் என்னவாக இருக்கும்? ஒத்துழைப்பு. ஆம். மனிதன் இவ்வுலகை ஆள முதற்காரணம் பெரிய எண்ணிக்கையிலான ஒத்துழைப்பு.எறும்புகளும் தேனீக்களும் பெருமளவில் தன் இனத்தோடு ஒத்துழைக்கின்றனவே என்று கேட்கலாம். அவை கடினமான சூழலில் ஒத்துழைப்பது இல்லை. காட்டாக, தங்களது தேன் கூட்டிற்கு ஆபத்து ஏதும் வந்தால் அதை கூட்டாக சமாளிக்கும் பலத்தை தேனீக்கள் பெறுவதில்லை. எறும்புகளையும் தேனீக்களையும் விட சிறப்பாக ஓநாய்களும் மனிதக்குரங்குகளும் கூட்டாக செயல்படும். ஆனால் மனித இனத்தைப் போல பெரிய எண்ணிக்கையில் அவைகளால் செயல்பட முடியாது. ஓநாய்களுக்கும் மனிதக்குரங்குகளுக்கும் தங்களது இனங்களின் மத்தியில் உள்ள ஒத்துழைப்பு தனிப்பட்ட அறிமுகத்தின் அடிப்படையிலானதாக இருக்கும். காட்டாக, ஒரு மனிதக்குரங்கு மற்றொரு மனிதக்குரங்கை பற்றி (நல்ல குரங்கா கெட்ட குரங்கா?? நம்ம வழிக்கு வருமா??)அறிந்துகொண்டிருந்தால் மட்டுமே ஒத்துழைப்போடு செயல்படும்.



எண்ணிலடங்கா அந்நியர்களிடம்கூட நல்லதொரு ஒத்துழைப்பை அளிக்கும் ஒரே இனம் மனித இனம். ஒரு மனிதனை விட ஒரு மனிதக்குரங்கு சிறந்து விளங்கலாம், பத்து மனிதர்களைவிட பத்து மனிதக்குரங்குகள் சிறந்து விளங்கலாம், ஆனால் ஆயிரம் மனிதர்களை ஆயிரம் மனிதக்குரங்குகளால் வெல்ல முடியாது. காட்டாக சென்னை ரெங்கநாதன் தெருவில் ஒரு லட்சம் மனிதக்குரங்குகளை விட்டால் அந்த இடத்தின் நிலை என்ன? அதுவே ஒரு லட்சம் மனிதர்களைவிட்டால்? வணிகமும், பொழுதுபோக்கும் பல மடங்கு பெருகும். சரிதானே?

ஒத்துழைப்பு நன்மையை மட்டும்தான் செய்கிறதா? என்றால், நிச்சயமாக இல்லை. கடந்து வந்திருக்கும் மனிதயின வரலாறே அதற்குச் சான்று. எத்தனை சிறைச்சாலைகள், எத்தனை கொலைகள், எத்தனை எத்தனை மத மோதல்கள். சிறைச்சாலைகளோ மதமோதல்களோ மனிதக்குரங்குகளிடம் இல்லை. எனினும் மனிதன் விளையாடுவதற்கோ, வணிகம் செய்வதற்கோ ஏன் கொலைகள் செய்வதற்கோ, பெரும் எண்ணிக்கையிலான மனிதர்களிடம் ஒத்துப்போவது எப்படி? இதற்கான விடை கற்பனை. ஆம், கற்பனை நிறைந்த கதைகளை (மத நூல்களை) உருவாக்கி, மக்களுக்கு மத்தியில் அதைப் பரவச்செய்து, அந்நியர்களைக்கூட நம்பவைக்க

முடியும். ஒரு கதையை அனைவரும் நம்புவார்களேயானால் மற்ற வினையங்களிலும் சிறப்பாக ஒத்துழைக்க முடியும். இந்த நம்பிக்கை மனிதனால் மட்டுமே நடந்தேறும்.

உங்களால் ஒரு மனிதக்குரங்கிடம் சென்று "நீ சொர்கத்திற்கு செல்வாய்" என்று நம்பவைத்து ஒரு வாழைப்பழத்தைக் கூட வாங்கிவிட முடியாது, மனிதனிடம் முடியும். இதனால்தான் மனிதன் உலகை ஆள்கிறான், மனிதக்குரங்குகள் விலங்கியல் பூங்காவிலும், ஆய்வுக் கூடத்திலும் தங்களது காலத்தை கழிக்கின்றன.

கடவுள், சொர்க்கம், நரகம் என்று கற்பனையில் எழுதப்பட்ட, பரப்பப்பட்ட கதைகளைக் கூட்டாக மனிதயினம் ஏற்றுக்கொண்டது. இந்த ஒத்துழைப்பு மற்ற வினையங்களிலும் பரவியது. சட்ட விதிமுறைகளை சான்றாகக்கொள்வோம். மனித உரிமைகளில் அடிப்படையிலேயே சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இங்கு மனித உரிமை என்பது கடவுள், சொர்க்கம் போன்ற ஒரு கதை. மனித உடலைக் கிழித்துப்பார்த்தால் உள்ளே உரிமைகள் இருக்கப்போவது இல்லை. குரங்குகளைப் போல ஓநாய்களைப் போல மனித உடலிலும் உரிமைகள் என்று ஒன்றுமே இல்லை. மனித இன ஒற்றுமைக்காக, நன்மைக்காக உருவாக்கப்பட்டன சட்டங்கள். மனிதஉரிமைகள் என்பது நன்மைக்கான கதை.

அரசியலும் அப்படித்தான், கடவுள், மனித உரிமை போன்று நாடுகளும் கற்பனை கதைதான். ஒரு மலையை உங்களால் காண முடியும், தொடமுடியும் ஆனால் இந்தியாவை? அமெரிக்காவை? அவை கற்பனையில் உருவாக்கப்பட்ட கதைகளேயன்றி உண்மையில்லை. அக்கதைகளோடு ஒன்றி வாழ்ந்துகொண்டிருகிறோம். பொருளாதார ஒத்துழைப்பிலும் பணம் என்பது கற்பனைக் கதையே, அத்தாளைக் கொண்டு அந்நியரின் கடைகளில்கூட உணவு வாங்கி உண்ணமுடியும். மனிதக்குரங்குகளிடம் பணத்தைக் கொடுத்து உணவு வாங்கிவிட முடியுமா? இவ்வுலகில் அனைவராலும் நம்பப்படும் கற்பனைக் கதை பணம். கடவுளை நம்பாதவர்கள்கூட பணத்தை நம்பி வாழவேண்டிய நிலை இன்று.

ஆக, உலகின் அனைத்து உயிரினங்களும் ஆறுகள், மலைகள், காடுகள், சிங்கங்கள், யானைகள் என்ற புறநிலை உலகில் வாழ மனிதயினம் இருவேறு உலகங்களில் வாழ்கிறது. ஒன்று சிங்கங்கள், யானைகள், ஆறுகள் அமைந்த புறநிலை உலகம், மற்றொன்று கற்பனைகதைகளும், சட்டங்களும் நிறைந்த யதார்த்த உலகம். இந்த கற்பனை நிறுவனங்கள்

வளர வளர மனித இனத்தின் ஒத்துழைப்பும் வளம் பெற்றது. அவ்வொத்துழைப்பே இன்று உலகை மனிதன் ஆள மூலமாக விளங்குகிறது.

*டெட் இணையதள பதிவின் அடிப்படையில் தமிழில் எழுதப்பட்ட கட்டுரை.*

# காமன்வெல்த் ஜூடோ போட்டிகளில் பதக்கம் வென்ற பார்வை மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு பாராட்டு விழா

பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான காமன்வெல்த் ஜூடோ போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வென்ற தமிழகத்தை சேர்ந்த மூன்று ஜூடோ வீரர்களுக்கான பாராட்டு விழா லிட் தி லைட் மற்றும் தோழன் அமைப்புகளால் இன்று சென்னை மயிலாப்பூரில் நடத்தப்பட்டது.

தென் ஆப்பிரிக்காவில் நடந்த காமன்வெல்த் போட்டிகளில் இந்தியாவை சேர்ந்த 5 வீரர்களில் மூவர் தமிழகத்தை சேர்ந்தவர்கள் என்பதும், தமிழகத்தை சேர்ந்த 3 வீரர்களும் பதக்கம் வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**செல்வி. M.சுசீலா (தங்கம்)**
**செல்வி. R.விஜயசாந்தி (தங்கம்)**
**திரு. J. மனோகரன் (வெண்கலம்)**

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினரான மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர் திரு. U. லோதா வீரர்களை வாழ்த்தி பேசுகையில் "இது போன்ற நிகழ்வுகள் பிற மாற்றுத் திறனாளிகளையும் ஊக்குவித்து அவர்களையும் சாதனையாளர்களாக ஆக்க பெரிதும் துணை புரியும்." என தெரிவித்தார்.

மற்றொரு சிறப்பு விருந்தினரான திரு. RJ பாலாஜி "இளைஞர்கள் வெள்ளத்தின்போது மட்டும் பொதுமக்களுக்கு சேவை செய்வதை தாண்டி இது போன்ற மாற்றுத்திறனாளி சாதனையாளர்களை அடையாளம் கண்டு சமூகப்பணி ஆற்றுவது பெருமையாக உள்ளது" என்றார்.
இதைத் தொடர்ந்து பேசிய லிட் தி லைட் அமைப்பின்
ஒருங்கினைப்பாளர் திரு. பர

அவர்களின் விளையாட்டுப் பயிற்சிக்கான செலவையோ, தென்ஆப்பிரிக்கா சென்றுவருவதற்கான செலவையோ விளையாட்டுத் துறை அதிகாரிகள் ஏற்காத நிலையில் அவர்களுடைய முழுச் செலவையும் லிட் தி லைட் அமைப்பு ஏற்பாடு செய்ததை நினைவு கூர்ந்தார்.

"நாங்கள் மாற்றுத்திறனாளி வீரர்களை ஊக்குவித்து அவர்களுக்கான உதவிகளை தொடர்ந்து செய்து வருகிறோம். தற்போது மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான உதவிகள் அரசிடமிருந்து மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளது. விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் ஆதரவு இருந்தால் இன்னும் பல திறமைசாலிகளை கண்டறிந்து அவர்களை அடையாளப் படுத்த வாய்ப்பாக அமையும். அரசு மாற்றுத்திறனாளி வீரர்கள் மீது அதிக அக்கறை காட்ட வேண்டும். சென்னையிலேயே சுமார் 20,000 திறமை வாய்ந்த பட்டதாரி மாற்றுதிறனாளிகள் உள்ளனர். அவர்களின் திறமை சரியாக அடையாளம் காணப்படாமல் உள்ளது. அதை நாம் வெளிக்கொணர வேண்டும்." என்றார்.

"இந்த நிகழ்விற்கு வந்து வீரர்களுக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் ஊடக நண்பர்களுக்கும் என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்." என்று அவர் தெரிவித்தார்.

## என்னவள்

**பத்மலோசினி பா**

யுகங்களுக்குள் நூற்றாண்டுகள் அடங்கும்,
நூற்றாண்டுகளுக்குள் வருடங்கள் அடங்கும்,
வருடங்களுக்குள் மாதங்கள் அடங்கும்,
மாதங்களுக்குள் வாரங்கள் அடங்கும்,
வாரங்களுக்குள் நாட்கள் அடங்கும்,
நாட்களுக்குள் நேரங்கள் அடங்கும்,
நேரங்களுக்குள் நிமிடங்கள் அடங்கும்,
நிமிடங்களுக்குள் நொடிகள் அடங்கும்,
நொடிகளுக்குள் வினாடிகள் அடங்கும்,
இவை அனைத்தும் உலகினுள் அடங்கும்,
இந்த உலகமே என்னவளின் உள்ளத்தில் அடங்கும்,
அவள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் கேட்க,
யுகங்களும்,நூற்றாண்டுகளும் தவம்கிடக்கும்,
அவள் சுவாசித்த காற்றினை-சுமக்க
மாதங்களும்,வாரங்களும் தவம்கிடக்கும்,
அவளது ஸ்பரிசத் தீண்டலுக்காக,
நாட்களும்,நேரங்களும் தவம்கிடக்கும்,

அவள் கோபங்களைக் காண,
நிமிடங்களும், நொடிகளும் தவம்கிடக்கும்,
அவளது பாதங்களை சுமக்க, இந்த
பூமியும் தவம்கிடக்கும்,
இருப்பினும்,
அவளையே சுமக்க,
என் கருவறை தவம்கிடக்கும்,
ஆம்,
என் அன்னையை சுமக்க,
என் கருவறை தவம்கிடக்கும்!

குறுதியில் குளித்த பிள்ளை-இன்று
குதிரையில் செல்லக்காணும்,
ஒவ்வொரு அன்னைக்கும்,
இந்தப் பிள்ளையின்,
அன்னையர் தின வாழ்த்துகள்!!

புதிய வரலாற்றுத் தொடர் – க. விசயகிருகணன்

## அஷ்டமா தேசம்

### 1. சூழ்ச்சியாளுதல்

முன்னொரு காலத்தில் பரந்த பாரத தேசத்தில் புகழ் பெற்று விளங்கிய இரு பெரும் தேசங்கள் சூரிய நாடு மற்றும் சந்திர நாடு. இவ்விரு தேசத்திற்கும் இயற்கை தன் அன்பு முழுவதையும் வழங்கி வளம் குன்றா தேசங்களாக செழிப்படையச் செய்திருந்தது. இவ்விரு தேசத்தையும் மகேந்திர பர்வதமலை அரணாக பிரித்து பாதுகாத்துக் கொண்டிருந்தது .எனினும் சூரிய தேசத்துடன் ஒப்பிடுகையில் சந்திர தேசம் அளவில் சிறியது, அளவில் குறைவிருந்தாலும், வீரத்தில் சூரிய நாட்டின் படை பலத்திற்கு சளைத்தவர்கலல்ல சந்திர தேசத்தவர்கள் . சூரிய தேசத்தை விக்கிரமராஜன் என்னும் அரசனும், சந்திர தேசத்தை பஞ்சகேந்திரன் என்னும் அரசனும் ஆட்சி புரிந்து வந்தார்கள்.

இவ்விரு தேசங்களின் மக்களும் எந்தக் கவலையுமின்றி செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். கல்வி, கலை மற்றும் வீரம் என்று மூன்றுலகத்தாரும் பொறாமை கொள்ளுமளவு இவ்விரு தேசங்களும்

சிறந்து விளங்கின. இவ்விரு தேசங்களும் ஒருவரையொருவர் நட்பு பாரட்டியதுமில்லை பகைமை கொண்டாடியதுமில்லை. எனினும் வீரத்தில் சிறந்த பஞ்சகேந்திரன் மீது விக்கிரமராஜனுக்கும் சிறு அபிமானம் உண்டு.

சந்திரதேசத்து அரசன் பஞ்சகேந்திரன் தன் தேச மக்களின் மீது பேரன்பு கொண்டிருந்தான். அதற்கு அடையாளமாக, தன் நாட்டில் கல்வியில் சிறந்த அந்தகி என்னும் பாமர பெண் ஒருத்தியின் மேல் நேசம் கொண்டு அவளையே மணந்தான். அத்துடன் நில்லாமல் மறுமணம் புரியேன் என்ற வாக்கையும் அளித்தான். இவ்விருவரின் அன்பின் அடையாளமாக தருகந்தன் என்ற மகன் பிறந்தான். விவரம் அறியா பாலகன். அழகில் சுந்தரன்.

எந்த ஒரு ராஜ்யத்துக்கும் ஒரு உச்ச காலம் இருப்பின் ஒரு வீழ்ச்சி காலமும் வந்தே தீரும். இது இயற்கையின் நியதி. அந்த ஒரு காலமும் சந்திர தேசத்திற்கு வந்தது. சந்திர தேசம் எப்படி இயற்கையால் சூழப்பட்டதோ அது போல பகைமையும் சூழ்ந்தே வளர்ந்து கிடந்தது. சந்திர தேசத்தை சுற்றி சிறிய பிரதேசங்கலாக ஒன்பது சிறு தேசங்கள் இருந்தன.

அவற்றில் கிழக்கு தேசம்-இதனை ஆகவராஜன் என்னும் அரசனும், மேலை தேசம்-இதனை அதிநந்தராஜன் எனும் அரசனும் , தென்னோடி தேசம்-இதனை திபேந்திரவர்மன் என்னும் அரசனும், வடவாடு தேசம்- இதனை வஞ்சிமுகன் எனும் அரசனும் , உச்சால தேசம்-இதனை உக்கிரதேவன் எனும் அரசனும் , கந்தக தேசம்- இதனை களிச்சரயன் எனும் அரசனும் , அஷ்டான தேசம் - இதனை அகிலாயமறவன் என்பவனும் , ஆதிங்க தேசம் - இதனை கேசவராஜன் எனும் அரசனும் , குஞ்சால தேசம் - இதனை தஞ்சமன் எனும் அரசனும் ஆண்டு வந்தனர்.

இந்த ஒன்பது தேசங்களிள் தென்னோடி தேசம் பலம் பொருந்தியது மற்றும் சூரிய மற்றும் சந்திர தேசங்களின் மீது வஞ்சகம் நிறைந்த ஒரு தேசம். சந்திர தேசத்தை கைப்பற்றி விட்டால் பிறகு சூரிய தேசத்தை அடைவது எளிதாகிவிடும் என்று தென்னோடி தேசத்தரசன் திபேந்திரன் எண்ணம் கொண்டிருந்தான். அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தான்.

சூழ்ச்சிக்கு பக்கபலமாக மற்ற எட்டு தேசத்து அரசர்களையும் ஓர் அணியில் திரட்டினான். சூழ்ச்சியை அரங்கேற்ற தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்துகொண்டிருந்தான். அதற்கான

செயல் திட்டங்களை ஒற்றர்கள் மூலம் செயல் படுத்த துவங்கினான், நாட்டின் அமைதியை குலைக்க உள்நாட்டு கலவரங்களை ஏற்படுத்தத் துவங்கினான்.

உள்நாட்டு குழப்பம் அதிகரித்த தருணம். தென்னோடி தேசராஜன் திபேந்திரவர்மன் மற்ற எட்டு தேச அரசர்களையும் ஒன்றிணைத்து சந்திரதேசத்தின் மீது போர்தொடுத்தான். எட்டு திசைகளிலிருந்தும் படைகள் சூழ்ந்தன, ஏற்கனவே உள்நாட்டு குழப்பத்தால் அமைதியிழந்திருந்த பஞ்சகேந்திரன் சரியான முடிவு எடுக்க முடியாமல் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தான். எனினும் அமைச்சர்களின் ஆலோசனை படி சூரிய தேசத்து மன்னன் விக்கிரமராஜனுக்கு உதவி கேட்டு ஓலை அனுப்பினான். தன் வீரத்தின் மீது அளப்பரிய கர்வம் கொண்டவன் பஞ்சகேந்திரன். தனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் நாட்டின் நலனுக்காக இதற்கு சம்மதம் தெரிவித்தான். ஆனால் பகைவர்களின் சூழ்ச்சியால் ஒற்றன் வதைக்கபட்டு உதவி கிடைக்கப்பெறாமல் செய்தனர் .

இறுதியாக பஞ்சகேந்திரன் , தன் முழுபலத்தையும் திரட்டி போர்களத்தை சந்தித்தான். வீரத்தில் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல சந்திர தேசத்தவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் வீரத்தை வெளிபடுத்தினர். எண்திசையும் குருதியாறு பெருகியோடியது. பெரும் சேதத்தை சந்தித்தன திபேந்திரவர்மன் தலைமயிலான பெரும் படை. எனினும் பகைவர்களின் சூழ்ச்சி வெல்ல போர்க்களத்தில் பஞ்சகேந்திரன் வீழ்த்தப்பட்டு வீரசொர்க்கம் அடைந்தான். சந்திர தேசம் வஞ்சகர்களின் வசம் வீழ்ந்தது.

பஞ்சகேந்திரனின் அன்பு மனைவி அந்தகியும் அவனுடன் உடன்கட்டை ஏறினாள். மறிக்கும் தன் அன்புமகன் தருகந்தனிடம் என்றாவது ஒரு நாள் இத்தேசத்தை உனதாக்குக என்று மட்டும் உரைத்து மறைந்தாள் .விவரம் அறியா மழலை பருவத்தவன் தருகந்தன் அவனது அரண்மனையிலேயே அடிமையாக்கப்பட்டான். சந்திர தேசத்தின் அரசனாக தென்னோடி தேசத்து அரசன் திபேந்திரவர்மன் முடிசூடிக்கொண்டான். பஞ்சகேந்திரனின் மரண செய்தி கேட்டு விக்கிரமராஜனும் மனம் கலங்கினான். சந்திர தேசம் அதன் வாழ்நாளில் முதல் முறையாக பகைவர்களால் வீழ்த்தப்பட்டு அஸ்த்தமனத்தைக் கண்டது.

தொடரும்...

## தாவரங்களின் தந்திரங்கள் - தொட்டாற்சிணுங்கி.

மரியா பெல்சின்



பெயரைக்கேட்டதும் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும். தொட்டாற்சுருங்கி என்றும் சொல்வார்கள். இதன் இலைகளை தொட்டதும் சுருங்கிக்கொள்ளும் தன்மை படைத்தது. இதன் வேர்க்கஷாயத்தை சாப்பிட்டு வந்தால் கல்லடைப்பு நீங்கும். மேலும் வாதத்தடிப்பையும் சரி செய்யக்கூடியது, தொட்டால்சிணுங்கி வேர்க்கஷாயம். இதன் சமூலத்தின் (முழு செடி) சாறு மூல நோயை சரி செய்யும். குறிப்பாக பவுத்திரப்புண்களின்மீது தொட்டாற்சிணுங்கி சமூலத்தின் சாற்றை பூசினால் குணம் கிடைக்கும். அதுமட்டுமல்லாமல் புரையோடிய அதாவது நீண்டநாள் புண்களின்மீது இந்த சாற்றை பஞ்சைத்தொட்டு பூசினால் குணம் கிடைக்கும். இதே சாற்றை அருந்துவதால் உடல் தேறுவதுடன் ஆண்மைக்குறை நீங்கும். வேரை காய வைத்து பொடியாக்கி பாலில் கலந்து குடித்தால் மூல நோய் குணமாகும். இதன் இலையை மெழுகுபோல் அரைத்து விரைவாதம், கை-கால் மூட்டு வீக்கத்தின் மீது பூசினால் குணம் கிடைக்கும். பெரும்பாடு என்பது பெரிய தொல்லை தரக்கூடிய ஒரு நோய். அதாவது மாதவிடாயின்போது வரக்கூடிய ரத்தப்போக்கு வந்துகொண்டே இருப்பதையே பெரும்பாடு என்பார்கள். இந்த பிரச்சினை தீர தொட்டால்சிணுங்கி இலையுடன் சீரகம், வெங்காயம் சேர்த்து அரைத்து மோரில் கலந்து குடித்து வந்தால் நல்ல தீர்வு கிடைக்கும். நீண்ட நாள் புண்ணான குழிப்புண்ணின்மீது தொட்டால்சிணுங்கி இலைச்சாற்றை விட்டு அதன்மீது வெற்றிலை வைத்து கட்டினால் புண் ஆறும்.

## சமூக இயக்கங்களின் சென்றமாத பணிகள்

### அறப்போர்

மக்கள் விழிப்புடன் இருந்தால் மக்கள் பிரதிநிதிகளும், மக்களுக்காக வேலை பார்க்கும் அரசு அதிகாரிகளும் தங்கள் கடமையில் இருந்து தவறுவது கடினம். இந்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்ப்படுத்த அறப்போர் இயக்கம் ஆரம்பித்துள்ள முயற்சி தான் KnowYourRights நிகழ்ச்சி.

கடந்த மாதம் மைலாப்பூரில் நடந்த இந்த நிகழ்ச்சியை அடுத்து அந்த பகுதியில் அறப்போர் இயக்கத்துடன் இணைந்த தன்னார்வலர்கள் கொடுத்த புகாருக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மந்தைவெளி MRTS ரயில் நிலையத்தை ஒட்டியுள்ள சாலையில் மாதக்கணக்கில் குவிந்திருந்த குப்பைகள் புகார் கொடுத்தவுடன் அகற்றப்பட்டுள்ளன. நமது சாலை நமது உரிமை. அதை சுத்தமாக வைத்திருக்க வேண்டியது மாநகராட்சியின் கடமை.

### Nature Lovers

தமது நான்காவது ஆண்டு துவக்கத்தை முன்னிட்டு Oxygen என்ற பெயரில் ஐநூறு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு Nature Lovers என்ற அமைப்பினரால் கடந்தமாதம் நடத்தப்பட்டது.

தங்களது மேலான கருத்துகளுக்கும் பங்களிப்பிற்கும் தொடர்புகொள்ளுங்கள்.

emagz@thozhan.org & 8122195591